செ.வெ. எண்: 461 நாள்: 18.7.2011

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (18.7.2011) தலைமைச் செயலகத்தில், விரைவு பட்டா மாறுதல் திட்டத்தினை திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10.6.2011 அன்று சட்டப்பேரவையில், மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்கு பதில் அளித்து பேசும் போது, பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தான் விரும்புவதாகவும், எனவே, பட்டா மாறுதலுக்கான விண்ணப்பிக்கும் முறையில் மாற்றம் கொண்டு வரப்படும் என்றும், பட்டா மாறுதல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பொது மக்கள் அலைய வேண்டிய அவசியம் இல்லாத வகையில் அவ்வாறான மனுக்களைக் கிராம நிர்வாக அலுவலரிடம் / VAO-விடம் சமர்ப்பிக்க வழிவகை செய்யப்படும் என்றும், வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் நில அளவையாளர் ஆகியோர் ஒரு குழுவாக செயல்பட்டு, பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்றும், பட்டா மாறுதலுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் கணினியில் பதியப்பட்டு அதிகாரிகள் அளவில் நில நிர்வாக ஆணையர் மட்டத்திலும், வருவாய் துறை அமைச்சர் அளவிலும் ஆய்வு செய்யப்படும் என்றும், வருவாய் நிலை ஆணையில், அதாவது Revenue Standing Order-ல், தக்க மாறுதல் செய்யப்பட்டு இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள்.

அதன் அடிப்படையில், பொது மக்களிடமிருந்து கிராம நிருவாக அலுவலர்கள் பட்டா மாற்ற மனுக்களைப் பெறும், வகையில், வருவாய் நிலை ஆணைகளில் (Revenue Standing Order) தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

பட்டா மாற்றம் பெறுவதில் மக்களுக்கு உள்ள இடர்களைக் களைவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த அறிவிப்பின்படி, இத்திட்டத்தில் அனைத்து கிராம நிருவாக அலுவலர்கள், ஒவ்வொரு திங்கட்கிழமையும், முழுநேரமாக அலுவலகத்தில் இருந்து பட்டா மாற்றம் சம்பந்தப்பட்ட மனுக்களைப் பெறுவார்கள். கிராமங்களில், கிராம நிருவாக அலுவுலர்கள் பணியிடம் காலியாக இருக்குமானால், ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையன்றும், முழு நேரமும் மேற்படி மனுக்கள் கூடுதல் பொறுப்பு வகிக்கும் கிராம நிருவாக அலுவலர்களால் பெறப்படும்.

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும், நில அளவர் மற்றும் கிராம நிருவாக அலுவவர்கள் முன்னிலையில், வருவாய் கணக்குகளில் தேவையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, வட்டாட்சியர் அலுவலகங்களில் பட்டா மாற்றத்திற்கான உத்தரவுகள் வழங்கப்படும். மாநிலம் முழுவதும், வெள்ளிக் கிழமைதோறும், வட்டாட்சியர் அலுவலங்களில், பட்டா மாற்றம் செய்யும் நாளாக கடைப்பிடிக்கப்பட்டு, பட்டா மாற்ற மனுக்களுக்கு விரைவில் முடிவு காணப்படும்.

இந்தப் புதிய திட்டத்தின் முக்கிய அம்சம், கிராம நிருவாக அலுவலர், குறுவட்ட வருவாய் ஆய்வாளர், குறுவட்ட நில அளவர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர்களுக்கு, பட்டா மாற்றம் தொடர்பான மனுக்களின் மீது அறிக்கை சமர்ப்பிக்க காலவரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொரு கட்டத்திலும் கணினியில் பதிவுகள் செய்யப்படுவதை கவனமாக கண்காணிக்கப்படும். உட்பிரிவு செய்ய அவசியம் இல்லாத இனங்களில் 15 நாட்களுக்குள்ளாகவும், உட்பிரிவு செய்ய வேண்டிய இனங்களில் 30 நாட்களுக்குள்ளாகவும், பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளனவா என்பதை வட்டாட்சியர் உறுதி செய்ய வேண்டும். பட்டா மாற்றம் செய்ய

தேவையில்லாமல் மண்டல துணை வட்டாட்சியர் / நில அளவர்கள் மற்றும் பிறருக்காக வட்டாட்சியர் அலுவலகங்கள் சென்று விவசாயிகள் மனுக்கள் கொடுக்க காத்திருப்பதை தவிர்த்து, தமது கிராமங்களிலேயே மனுக்களை கிராம நிர்வாக அலுவலரிடம் சமர்ப்பித்தால் போதுமானது.

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில் 11.07.2011 மற்றும் 12.07.2011 ஆகிய தேதிகளில் பெறப்பட்ட பட்டா மாறுதலுக்கான மனுக்கள் மீது பட்டா மாறுதல்

செய்து வழங்கப்படும் ஆணைகள் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

பட்டா மாறுதல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பொது மக்கள் அலைய வேண்டிய அவசியம் இல்லாத வகையில் அவ்வாறான மனுக்களை அந்தந்த கிராம நிர்வாக அலுவலரிடம், அதாவது VAO-விடம் சமர்ப்பிக்க வழிவகை செய்து, வீணான அலைச்சலையும், நேரத்தையும், பயணச் செலவையும் குறைத்து, பட்டா மாறுதல் குறித்த விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு பொதுமக்கள் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியதாவது:- "அனைவருக்கும் வணக்கம். கடந்த மாதம் 10–ஆம் தேதி சட்டமன்றப் பேரவையில், இந்த பட்டா மாறுதலுக்கான நடைமுறை எளிமையாக்கப்படும், எளிதாக்கப்படும் என்று அறிவித்து இன்று அதனை தொடங்கி வைப்பதில் உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இன்றைக்கு இத்தனை பேருக்கு பட்டா மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதை கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் புதிய நடைமுறையை பொதுமக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என்ற எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்."

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், வருவாய்த்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய்த்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**
**நாள் : 18.7.2011**